ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2256/53 - 2021 දෙසැම්බර් මස 03 වැනි සිකුරාදා - 2021.12.03

*2256/53 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1அ) ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படும் விசாரணை*

மேல் மாகாணத்தின் ஆளுநர் ரொஷான் குணதிலக ஆகிய நான் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க, வத்தளை மாபோல நகர சபை மற்றும் அதன் தவிசாளராக செயற்பட்ட போது மேற்கூறிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1) ஆம் உப பிரிவின் கீழ் காட்டப்படும் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளனவா என்று விசாரணை செய்து 03 மாதங்களினுள் அறிக்கை ஒன்றினை முன்வைப்பதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2152/14 ஆம் இலக்க 2019 திசெம்பர் 03 ஆந் திகதி அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு. சந்திரதாச நானாயக்கார அவர்களை உள்ளடக்கிய தனி நபர் விசாரணைக் குழு சபையின் விசாரணைக் காலத்தினை 2022, மார்ச் மாதம் 03 ஆந் திகதி வரை நீடிப்பதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

**ரொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அன்ட் பார் வீஎஸ்வீ யூஎஸ்பி,
பீஎச்டி எப்ஐஎம் (ஸ்ரீலங்கா) என்டிசீ
பீஎஸ்சீ,
விமானப் படையின் மார்ஷல்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

பத்தரமுல்ல, மேல் மாகாண சபைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள,
மேல் மாகாண ஆளுநர் காரியாலயத்தில்.
2021 திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி,

1A - PG 5641 — 15 (2021/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*